செ.வெ.எண் : 09 / ஜூன் நாள் : 06.06.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்க்கும் பணிகள் துவக்கம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் இன்று (06.06.2017) முதல் நடைபெறுகின்ற, மாவட்டத்தில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்க்கும் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 126 சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள் மற்றும் 163 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பிட 09.03.2017 முதல் 23.03.2017 வரை அந்தந்த ஊராட்சி ஒன்றிய /நகராட்சி அலுவலகங்களில் விண்ணப்பம் பெறப்பட்டது.

மனுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, காலிப்பணியிடங்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பு ஊராட்சி ஒன்றிய / நகராட்சி வாரியாக இன்று (06.06.2017) முதல் 10.06.2017 வரையிலான 5 நாட்கள் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மகளிர் திட்ட பயிற்சி கூட்ட அரங்கில் நடைபெறுகின்றது.

பணியிடங்களுக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியான நபர்களை தெரிவு செய்து, சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு 4,601 நபர்களுக்கும், சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு 1,575 நபர்களுக்கும் முன்னதாக சான்றிதழ் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை அனுப்பப்பட்டது.

சான்றிதழ் சரிபார்க்கும் பணிகளுக்காக மாவட்ட மகளிர் திட்ட அலுவலக கூட்டரங்கில் 15 மேஜைகளும், ஒவ்வொரு மேஜைக்கும் ஒரு துணை வட்டாட்சியர் நிலை அலுவலர், ஒரு உதவியாளர் வீதம் 30 அலுவலர்களும், சான்றிதழ் சரிபார்ப்பு (NODAL OFFICERS) அலுவலர்களாக துணை ஆட்சியர்/ வட்டாட்சியர் நிலை அலுவலர்கள் 7 நபர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் நகராட்சி மற்றும் இராமநாதபுரம், திருப்புல்லாணி, ஆர்.எஸ்.மங்கலம், திருவாடனை ஆகிய ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பணியிடங்களுக்கு (06.06.2017) இன்றைய தினமும், பரமக்குடி நகராட்சி மற்றும் பரமக்குடி, மண்டபம் ஆகிய ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பணியிடங்களுக்கு 07.06.2017-ம், நயினார்கோவில், போகலூர், முதுகுளத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பணியிடங்களுக்கு 08.06.2017-ம், கமுதி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பணியிடங்களுக்கு 09.06.2017-ம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பணியிடங்களுக்கு 10.06.2017-ம் சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் நடைபெறுகின்றன.

இந்த நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (சத்துணவு) திரு.கணபதி, (வளர்ச்சி) திருமதி.உமா மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவுலர் திரு.முருகானந்தம், பரமக்குடி நகர நில அளவைத் திட்ட அலுவலர் திருமதி.அமலோற்பவ ஜெயராணி உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**